**இலங்கை மன்றம் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் இலங்கை மன்றத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடன் தொடர்புடனான இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தற்போது பயன்படுத்தப்படுகின்ற ரூபா 14,110,661 ஆன மின் உபகரணங்கள் மற்றும் சமையலறை உபகரணங்களின் பயன்படு ஆயுட்காலம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | இச்சொத்துக்களின் பெறுமதி 2021 ஆம் ஆண்டின் போது மீண்டும் மீளாய்வுசெய்து சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்வதற்கு குறித்துக் கொண்டதாக | நியமத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது செயலமர்வுகள் மற்றும் | வங்கிக்கு நேரடியாக கிடைத்த அனுப்புகை | நியமத்தில் குறிப்பிடப்பட்டதன் |

| | | | |
|---|---|---|---|
| | பாடநெறிக் கட்டணங்களாக கிடைத்திருந்த ரூபா 1,875,250 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 10 இன் பிரகாரம் சேவை வருமானமொன்றாக இனங்காணப்படாத செலுத்த வேண்டிய முற்பணமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.இதனனால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை மற்றும் நடைமுறையல்லாத பொறுப்புக்கள் அப்பெறுமானத்தினால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | இதில் உள்ளடக்கப் பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இந்த அனுப்புகை எந்த விடயத்திற்காக வைப்புச் செய்யப்பட்டதாக இனங்காண்பதற்கு தேவையான சான்றுகள் கிடைக்கவில்லை. சரியாக இனங் காணப்பட்டதன் பின்னர் உரிய வருமானக் கணக்குகளுக்கு செலவு வைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றில் திரண்ட நிதியம் மற்றும் நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் முறையே ரூபா 6,582,809 மற்றும் ரூபா 530,459,754 என குறிப்பிடப்பட்டிருந்த போதும் தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்றில் அது முறையே திரண்ட பற்றாக்குறை ரூபா 100,686,706 மற்றும் பங்களிப்பு மூலதனம் ரூபா 637,698,179 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | நியமக் கூற்றில் வெவ்வேறான உருப்படியாக எடுக்கப்பட்ட போது ஏற்பட்ட வேறுபாடு அடுத்த ஆண்டில் ஆராய்ந்து பார்த்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உரிய சீராக்கங்கள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்களின் தன்மையின் பிரகாரம் திட்டவட்டமான அறவிட முடியாக் கடன் ஒதுக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாமல் கடன்பட்டோரிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகளுக்காக 100 சதவீதம் ஐயக் கடன் ஒதுக்கீடும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளுக்காக 50 சதவீதத்திலிருந்து 7.5 சதவீதத்திற்கு இடைப்பட்ட ஐயக்கடன் ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த ஐயக் கடன் ஒதுக்கீடு ரூபா 6,844,605 ஆக இருந்தது. | திட்டவட்டமான அறவிட முடியாக் கடன் ஒதுக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | திட்டவட்டமான அறவிட முடியாக் கடன் ஒதுக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.3. தொங்கல் கணக்குகள்**

| விடயம் | தோகை | நிச்சமற்றதாக இருந்த காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| தொங்கல் கணக்குகள் | 189,587 | 2015 ஆம் ஆண்டு முதல் | இவ்விடயம் தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் சட்ட நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையால் தொங்கல் கணக்கில் உள்ள மீதியை தீர்வு செய்வதற்கு இயலாமல் உள்ளது | தொங்கல் கணக்கு விரைவில் தீர்வு செய்யப்பட வேண்டும். |

**1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,375,812 ஆன நிறுத்தி வைத்தல் வரி மீளாய்வாண்டின் போதும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல சந்தர்ப்பங்களில் இத் தொகையை மீளப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுத்த போதும் அது வெற்றியளிக்க வில்லை. | நீண்டகாலமாக காணப்படும் இம்மீதியை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 ஆம் பந்தி | ரூபா 3,722,953 ஆன உடற்பயிற்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது அனைத்து அண்மித்த செலவினங்கள் உட்படுத்தி மொத்த கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை . | மொத்தச் கிரய மதிப்பீடொன்று வெவ்வேறாக தயாரிக்கப்படாத போதும் மொத்த மதிப்பீடாக ரூபா 04 மில்லியனாக மூலதன சொத்துக்கள் விண்ணப்ப படிவத்தில் (சுநங ேெ0 2256) குறிப்பிடப்பட்டிருந்தது. | அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இது தொடர்பாக 2019/07/10ஆந் திகதிய ளுடுகு.்.வுடீ.்.2019.்.09ஆ ம் இலக்க கேள்வி சபை தீர்மானத்திலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு பின்னர் எதிர்வரும் கொள்வனவுகளின் போது அனைத்து கிரய மதிப்பீடுகளையும் தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப் பட்டுள்ளதாக

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,778,597 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 9,370,945 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,407,652 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு ஏனைய வருமானம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை மன்றத்திற்கு சட்டரீதியாக உரித்து காணப்படும் ரூபா 5,283,015 புத்தக பெறுமதியான கட்டிடமொன்று எழுத்து மூல உடன்படிக்கையின்றி வெளித்தரப்பினருக்கு பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது. | தொடர்ந்தும் இலங்கை மன்றத்தின் நிர்வாக தரப்பினரால் இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் தேவையான நடவடிக்கை களுக்காக பொறுப்பு வாய்ந்த நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்த ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |